பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.10.2024 முதல் 13.10.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 081 (10) PJN/GKMS/2024 தேதி: 08.10.2024

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (03.10.2024 முதல் 07.10.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -13.10.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **03/10** | **04/10** | **05/10** | **06/10** | **07/10** | | **நாள்-1 09/10** | **நாள்-2 10/10** | **நாள்-3 11/10** | **நாள்-4 12/10** | **நாள்-5 13/10** |
| 0 | 0 | 47.50 | 0 | 0 | மழை (மி.மீ) | 5 | 4 | 10 | 15 | 36 |
| 37 | 37 | 37 | 37 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 31 | 30 | 30 | 29 | 28 |
| 27 | 27 | 23 | 25 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25 | 24 | 24 | 23 | 22 |
| 4 | 3 | 5 | 5 | 4 | மேக மூட்டம் | 8 | 8 | 8 | 5 | 8 |
| 61-81 | 68-89 | 74-96 | 75-89 | 73-89 | ஈரப்பதம் (%) | 60-80 | 60-80 | 60-80 | 60-80 | 60-80 |
| 7 | 5 | 5 | 3 | 1 | காற்றின் வேகம் (கி.மீ) | 16 | 12 | 16 | 14 | 16 |
| தென் மேற்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (09.10.2024 முதல் 13.10.2024 வரை):**

அக்டோபர் 09 லிருந்து 11 வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அக்டோபர் 12 மற்றும் 13 தேதிகளில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 22-31 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-80 சதவிகிதமாகவும், காற்றின்வேகம் 12-16 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | நெல் இரகங்கள் | பின்சம்பா/தாளடி பருவத்திற்கு ஏற்ற மத்திய கால நெல் இரகங்களான எடிடீ 38 (ADT 38), எடிடீ 39 (ADT 39) எடிடீ 46 (ADT 46), கோ 50 (Co 50), கோ 52 (Co 52), டீகேஎம் 13 (TKM 13), டீஆர்ஒய் 3 (TRY 3) மற்றும் கேகேஎல்ஆர் 2 (KKLR 2) விதைகளை பயன்படுத்தலாம். கேகேஎல்ஆர் 4 (KKLR 4) விதைகளை அக்டோபர் 15 வரை விதைக்கலாம். |
| | நிலம் | சேற்று வயல் நேரடி விதைப்பில் 50 கிலோ மணிச்சத்தை அடியுரமாக இட |

| | | |
|---|---|---|
| | தயாரித்தல் | வேண்டும். பின்பு நிலத்தை சமன் படுத்தி, அரை அடி அகலத்தில் சிறிய வடிகால் வாய்க்கால்கள் நிலத்தின் குறுக்கேயும், 3 மீ இடைவெளியிலும், வரப்பின் ஓரத்திலும் அமைப்பதனாலும் கன மழை ஏற்படும் போது அதிக நீரை வடிகட்டி ஆரம்ப வளர்ச்சி நிலையில் உள்ள நெற் பயிரை பாதுகாக்கலாம். |
| நெல் | உலர் விதை நேர்த்தி | ஒரு கிலோ விதைக்கு கேப்டான் அல்லது திரம் பூசணக் கொல்லியுடன் 4 கிராம் என்ற அளவில் விதைப்பதற்கு 24 மணி நேரம் முன்னதாகவே கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். இம்முறையானது நாற்றுகளுக்கு 40 நாட்கள் வரை **குலைநோய்** மற்றும் **செம்புள்ளி** நோய் போன்றவை தாக்காமல் பாதுகாக்கிறது. |
| | களை மேலாண்மை | **நாற்றங்காலில்** களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பூட்டாக்ளோர் (Butachlor 50 EC) என்ற களைக்கொல்லியை 1.0 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த எட்டாம் நாள் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பிரிடிலாக்குளோர் + சேப்னர் (Pretilachlor + safener 30 EC) என்ற களைக்கொல்லியை 0.45 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த மூன்றாம் நாள் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி புழுதி விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பென்டிமெத்தாலின் (pendimethalin 30 EC) 1.0 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த ஐந்தாம் நாள் தெளிக்க வேண்டும். |
| தற்போது நிலவும் வானிலையானது பின்வரும் பூச்சிகளின் தாக்கத்திற்கு சாதகமாக உள்ளதால் பூச்சியின் கடுமையான தாக்குதல் கண்டறியப்பட்டால், அந்தந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கலாம். | | |
| நெல் | முள் வண்டு / ஹிஸ்பா வண்டு | தாக்குதலின் அறிகுறிகள்<br><br><br>நெல்லில் ஹிஸ்பா வண்டுகளை கட்டுப்படுத்த கார்டாப்ஹைட்ரோகுளோரைடு 50% எஸ்பி 1000 கிராம் தெளிக்கவும். |
| பூசணி | பூசணி வண்டுகள் | பூசணி வண்டுகளை கட்டுப்படுத்த, ஹெக்டேருக்கு மாலத்தியான் அல்லது மிதைல் டெமட்டான் 500 மி.லி தெளிக்கவும் |
| வெண்டை | மாவுப்பூச்சி | மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்த, ஹெக்டேருக்கு அசாடிராக்டின் 0.03 % WSP 2500-5000 கிராம் பயன்படுத்தவும். |
| கத்திரி | மாவுப்பூச்சி | |
| கொய்யா | மாவுப்பூச்சி | |
| கால்நடை | தடுப்பூசி செலுத்துதல் | கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்களுக்கு மழைக்காலம் தொடங்கும் முன்னர் தடுப்பூசிகளைப் போட வேண்டும். |
| | குடற்புழு | குளம், குட்டைகளில் தண்ணீர் குடிக்கும் மாடுகளுக்கும் அவற்றைச் சுற்றி மேயும் மாடுகளுக்கும் தட்டைப் புழுவிற்கான குடற்புழு நீக்க மருந்தினைப் |

| | | |
|---|---|---|
| | நீக்கம் | கொடுக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் நிலத்தை தயார் செய்து நெல் விதைப்பை மேற்கொள்ளலாம்.

**முதல்வர்**